# "ஈழத்துப் பெண் போராளிகளின் கவிதைகள் : 1980களின் பின் வெளியான கவிதைகளினூடான ஒரு விமர்சனப் பார்வை"

**Supervisor**
*Mrs. MASF. Saadhiya Fowzer,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Ms. Chandrika Bernard Joseph,*
*Department of Languages,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

## ஆய்வுச் சுருக்கம்

தமிழ்த்தேசிய வாதத்தை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்ட ஆயுதமேந்திய போராட்டத்தின் பின்னணியில் எழுந்த இலக்கியங்களே ஈழத்துப் போர் இலக்கியங்களாகும். இலங்கை, சிங்கள, தமிழ், முஸ்லீம், கிறிஸ்தவர்கள் வாழ்கின்ற ஒரு ஜனநாயக நாடாகும். அவ்வாறானதொரு நாட்டில், பெரும்பான்மை இனத்திற்கு வழங்கப்படுவது போன்ற உரிமைகள் சிறுபான்மை இனங்களிற்கும் வழங்கப்பட வேண்டும் என்பது முக்கியமானதொரு அம்சமாகும். சிறுபான்மையினரின் உரிமைகள் தொடர்ச்சியாக மறுக்கப்படும் போது, அவற்றுக்கெதிரான போராட்டங்கள் இடம்பெறுவது தவிர்க்கமுடியாத ஒன்றாகும். தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் ஆரம்பமும் இவ்வாறே உருவானது. இவ்வாறு துளிர்விட்ட விடுதலைப் போராட்டமானது பிற்காலத்தில் பெருவிருட்சமாகியது. விடுதலைப் போராட்டத்தின் பின்னணியில் நாவல், சிறுகதை, கவிதை, நாடகம் முதலிய இலக்கியங்கள் தோற்றம் பெற்றுள்ளன. இவற்றுள் கவிதை முக்கிய இடத்தினைப் பெறுகின்றது.

சில தசாப்தங்களாக போரை மையப்படுத்திய கவிதைகள் கணிசமான அளவில் வெளிவந்துள்ளன. இதிலே ஆண்களும் பெண்களும் இயன்ற அளவு பங்களிப்பு நல்கியுள்ளனர். இனமுரண்பாடுகள், இனஒடுக்குமுறை, தமிழ்த் தேசியவாதம் முதலியன தொடர்பாக 1960 களிலேயே கவிதைகள் வெளிவரத் தொடங்கியிருந்தாலும் போர்க்கவிதைகள் என்கின்ற கருத்தாக்கமானது 1980களிலேயே முனைப்புப் பெறத்தொடங்கிற்று. 1990களிலே இதன் வளர்ச்சியினை காண முடியும். இதிலே பெண்களது பங்களிப்பும் குறிப்பிடத்தக்க அளவில் காணப்படுகின்றது. போர்க்களத்திலே நின்று போர் செய்யும் போராளிகளால் எழுதப்பட்டவை, போர்ப்பிரதேசத்திலே வாழ்பவர்களால் எழுதப்பட்டவை, போர்ப்பிரதேசம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் வாழ்பவர்களால் எழுதப்பட்டவை என போர்க்கவிதைகளை மூன்று பிரிவாக நோக்க முடியும்.

ஒரு சம்பவத்தை அனுபவித்து எழுதுகின்ற போது அங்கு வெளிப்படுத்தப்படுகின்ற உணர்வு நிலைக்கும் ஒரு சம்பவத்தை பார்வையின் மூலம் அனுபவித்து எழுதுகின்ற போது அங்கு வெளிப்படுத்தப்படுகின்ற உணர்வு நிலைக்கும ஒரு சம்பவத்தை கேள்வியின் மூலம் பெற்று எழுதுகின்ற போது அங்கு வெளிப்படுத்தப்படுகின்ற உணர்வு நிலைக்கும் இடையே பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன.

போர்க்களத்திலே நின்று போர் செய்கின்ற ஒரு போராளியினது உயிர், மெய் வலிகளும் உறவுகள் பற்றிய நெருடல்களும் ஒரு புறம் இருக்க, அதனைத்தாண்டிய தமிழீழத்தாயக நம்பிக்கைகளையும் எதிர்பார்ப்புக்களையும் இவர்களது கவிதைகளினூடாகக் காணமுடியும். அந்த வகையில் போராளிக்கவிஞைகளின் பங்களிப்பானது மிக உன்னதமானதாகும். அத்தகைய போராளிக்கவிஞைகளால் படைக்கப்பட்ட கவிதைகளே இங்கு ஆராயப்பட்டுள்ளன.

ஈழத்துப் பெண்போராளிக் கவிஞைகளை இனங்கண்டு, அவர்களது கவிதைகளின் மூலம் வாழ்க்கைத் தரிசனத்தையும் அவர்களது போர் அனுபவங்களையும் அடையாளப்படுத்தல், ஈழத்துப் போர்க்கவிதைகளினுடைய முக்கியத்துவத்தினையும், ஈழத்துக் கவிதை வளர்ச்சியிலே போர்க்கவிதைகளின் பங்கினையும் மதிப்பிடல் ஆகிய நோக்கங்களினை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேர்காணல், வினாக்கொத்து மற்றும் களஆய்வில் பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள், போர்க்கவிதைகள் என்பன இவ்வாய்வில் முதலாம் நிலைத் தரவுகளாகவும் இவ்வாய்வோடு தொடர்பாக வெளிவந்த நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள் மற்றும் சஞ்சிகைகள் பத்திரிகைகள் இணையத்தளம் முதலியவற்றில் வெளிவந்த கட்டுரைகள் என்பன இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வில், சமூகவியல், ஒப்பீட்டு, விளக்கமுறை அணுகுமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

போராளிக் கவிஞைகள் தமது சொந்த வாழ்க்கை பற்றிய அனுபவங்களையும் போர் அதனோடு தொடர்பான இன்னோரன்ன அம்சங்களையும் யதார்த்தபூர்வமாக தமது கவிதைகளில் சித்திரித்திருப்பதை அவர்களது கவிதைகளில் காணமுடியும்.

**Key Words:** ஈழத்துப் பெண் போராளிகள், கவிதை